# தமிழ் இணையக் கல்விக்கழகம்
# சென்னை – 600 025.

## இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)
## முதலாம் ஆண்டு – முதற்பருவம்

## ஜனவரி – பிப்ரவரி 2025
## C012 – இடைக்கால இலக்கியம்

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

### பிரிவு – 1

**ஒரு சொல் / தொடரில் விடை தருக. (15x1=15)**

1. இல்லறத்திற்குரிய அறங்களை நாலடியாரில் எவ்வியலில் காணலாம்?
2. திரிகடுகம் என்ற நூல் உணர்த்தும் மூன்று மருந்துப்பொருள்கள் யாவை?
3. இன்னா நாற்பதில் இடம்பெற்றுள்ள இன்னாத கருத்துகள் எத்தனை?
4. எப்படிப்பட்ட நட்பை விலக்க வேண்டும் என்கிறது பழமொழி?
5. நீதி நூல், பெண்மதிமாலை ஆகியவற்றை இயற்றியவர் யார்?
6. மருந்து என்பது எதைக் குறிக்கும்?
7. எத்தொழிலுக்கு ஒப்பான தொழில் எதுவும் இல்லை?
8. அனைவருக்கும் தெய்வமாகக் குமரகுருபரர் யாரைக் குறிப்பிட்டுள்ளார்?
9. பிரபந்தம் என்ற சமஸ்கிருதச் சொல்லின் பொருள் யாது? நன்கு கட்டப்பட்டது.
10. கிளியின் வேறு பெயர்கள் இரண்டைக் குறிப்பிடுக.
11. குறத்தியின் கணவர் பெயர் யாது?
12. கோவை இலக்கியத்தின் மற்றொரு பெயர் யாது?
13. எத்தனை யானைகளைக் கொன்றால் பரணி இலக்கியத்தின் பாட்டுடைத் தலைவன் ஆகலாம்?
14. பள்ளு இலக்கியங்களில் முதன்மைப்படுத்தப்படும் தொழில் எது?
15. தமிழில் தோன்றிய முதல் சதக நூல் எது?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக (5x3=15)**

1. மூவகை மரங்களில் எவ்வகை மரங்களை மேன்மக்களுக்கு உவமை கூறுகிறது நாலடியார்? ஏன்?
2. கல் தேயும் தேயாது சொல் என்பதன் மூலம் நூலாசிரியர் எந்தக் கருத்தை விளக்குகிறார்?
3. சதகம் என்றால் என்ன?
4. நட்பில் பிரிவு கூடாது என்பதற்கு நன்னெறி கூறியுள்ள உவமையை விளக்குக.
5. சிற்றிலக்கியங்களைப் பொருள் அடிப்படையில் எவ்வாறு பாகுபாடு செய்யலாம்?
6. தலைவிக்காகத் தலைவன் செய்யத் தயாராய் உள்ள வேலைகள் யாவை?
7. தொடுக்கும் கடவுட் பழம்பாடல் எனும் பாடல்வழி மீனாட்சியம்மையின் மாண்புகளை விளக்குக.
8. இராசராச சோழன் உலா கூறும் முன்னோர் சிறப்புகள் நான்கினைத் தருக.

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) இன்னா நாற்பது கூறும் ஒழுக்க முறைகள் குறித்து எழுதுக.

   (அல்லது)

   (ஆ) அறநூல்களின் அமைப்பும் காலமும் குறித்துக் கட்டுரை வரைக.

2. (அ) முருகனின் பெருமைகளை உலகநீதி வழி விளக்கி எழுதுக.

   (அல்லது)

   (ஆ) பண்டைத் தமிழர்களின் பழக்கவழக்கங்களைக் குற்றாலக் குறவஞ்சி வழி விளக்குக.

3. (அ) நந்திக் கலம்பகத்தின் உறுப்புகள் குறித்து விளக்குக.

   (அல்லது)

   (ஆ) மூவர் உலா குறித்துக் கட்டுரை வரைக.

***